31st March 1955]

படுகிறார்கள் என்பதுதான். ஆகவே பில்லிபசரா, கொளிஞ்சி போன்ற விதைகளை சேகரிக்க ஏற்பாடு செய்து, சர்க்கார் இலாகா மூலமாக விவசாயி களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" எந்தெந்த விவசாயி கள் என்னென்ன ரக விதையைக் கேட்கிறார்களோ அதை சரசமான விலைக்குக் கொடுப்பதற்குத்தான் அரசாங்கம் கவனம் செலுத்திவரு கிறது."

SRI S. THINAKARASWAMI THEVAR :—" செஸ்பேனியா உண்மை யிலேயே நல்லது சிறந்தது என்றிருந்த போதிலும்கூட பயிர் களிலே கதிர் வாங்கும் காலத்தில் விசேஷ பலன் கிடைக்காமல் இருக்கிறது. செஸ்பேனியாவை பயிரிடும்போது தண்ணீரைப் பக்குவமாக உபயோகித்து பயிர் செய்தாலொழிய அதை காப்பாற்ற முடிவதில்லை. ஆனால், நெட்டி விதைகளை இலகுவாகப் பயிர் செய்யலாம். அதை உபயோகப்படுத்துவதி னால் விசேஷ பலன் கிடைக்கிறது. கதிர்களும் நன்றாக வருகிறது. நெட்டி விதையை எல்லா இடங்களிலும் விதைத்து தாள் உரத்தை உபயோகிக்கும் முறையில் ஏற்பாடு செய்யலாம். இதில் சர்க்கார் விசேஷ கவனம் செலு த்துவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சர்க்கார் கவனம் செலுத்தும். திருமங்கலம் தாலுகாவைக் சுற்றியுள்ள விவசாயி களுக்கு இதை எடுத்துச் சொல்லி, கனம் அங்கத்தினர் கொஞ்சம் ஆதரவு கொடுத்தால் விவசாய இலாகாவைப் பொறுத்த மட்டில் எவ்வளவு ஆதரவு இது விஷயத்தில் அளிக்கவேண்டுமோ அந்த அளவுக்கு ஆதரவு அளிக்கலாம் என்று கனம் அங்கத் தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்."

Local Fund Dispensary, Tirukkoyilur

* 1751 *Q.*—SRI A. MUTHUSWAMI : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal to convert the local fund dispensary in Tirukkoyilur into a Government hospital; and

(*b*) if so, the stage at which the matter stands now?

THE HON. SRI A. B. SHETTY :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI A. MUTHUSWAMI :—" திருக்கோயிலூர் லோகல் பண்டு ஆஸ்பத் திரியில் சென்ற இரண்டு வருஷ காலமாக லேடி டாக்டரைப் போடாமல் இருக்கிறார்கள். திருக்கோயிலூர் மேஜர் பஞ்சாயத்தாக இருப்பதனாலும், தாலுகாவுக்குத் தலைநகராக இருப்பதனாலும் அங்கு சிகிச்சை செய்து கொள்ள வரும் கூட்டங்களை ஒரு Male டாக்டரினால் சமாளிக்க முடியவில்லை. ஆதலால் அந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு லேடி டாக்டரைப் நியமிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI A. B. SHETTY :—" The need for posting a woman doctor will be given proper consideration."